1981 ஏப்ரல் 23]

நானும் அதைத்தான் நினைத்துக்கொண்டு இருந்தேன். ஆகவே அந்தத் திட்டம் இப்போது இல்லை என்று இங்கே நான் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து தருவார்களானால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே கடி சம்பந்தமான வியாதிகளுக்கு இலக்கணம் என்ற தழை, நல்ல முறையில் பயன் படுகிறது. சர்க்கரை வியாதிகளுக்கு எலிக்காய் தழையும், ரத்தக் கொதிப்பிற்கு வேலிப்பருத்தி தழையும், மஞ்சள் காமாலை நோய் போக்குவதற்கான மூலிகைத் தழையும், பொதுவாக அனைத்து வியாதிகளுக்கும் தேவையான ஆதுவேர், கரிசால், முசுமுசுக்கை போன்ற தழைகளும், பாம்பு கடிக்கு சிறியாநங்கை, பெரியாநங்கை என்ற தழையும், மூல வியாதிகளுக்கு நல்லிரைத் தாமரை என்ற தழையும், வாதம், நீரிழிவு நோய்களுக்கு சித்திரை மூலத்தழையும் மற்றும் பல மூலிகைகளும் பல நோய்களைக் குணப்படுத்த சிறந்தவைகளாக இருப்பவை அங்கே இருக்கின்றன. எனவே அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே ஒரு மூலிகைப் பண்ணை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்து இருக்கும் தகவலின் அடிப்படையில் நிச்சயமாக அதைஅரசாங்கம் பரிசீலிக்கும்.

சென்னை நகரில் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 783—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொருத்தி சைக்கிள் ஓட்டச் செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 35 சி. சி. சக்தி வாய்ந்த இயந்திரங்களை சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்த அரசு அனுமதி வழங்கியது. தற்போது 120 சி. சி. இயந்திரங்களைப் பழைய சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதிதாக 50 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டும் 120 சி. சி. இயந்திரம் பொருத்த அனுமதி அளிக்கலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாவுக்கு இயந்திரம் பொருத்தும் வேலை எப்போது முடிவு அடையும்? அந்த இயந்திரத்தின் விலை என்ன ? அது உள் நாட்டில் தயாரிக்கப்பட்டதா? வெளி நாட்டில் தயாரிக்கப் பட்டதா ? இனாமாகத் தரப்படுமா? தவணை முறையில் தரப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள்தான் அவைகள். எந்தெந்த இயந்திரங்களை அவர்கள் பொருத்துகிறார்களோ அதைப் பொறுத்து இருக்கிறது அவற்றின் விலையும். இத் தகைய இயந்திரங்களை பல கம்பெனிகள் தயாரித்துக் கொண்டு இருக்கின்றனர். எனவே என்ன விலை என்பதை நான் இங்கே சொல்ல முடியாது. ஏறத்தாழ 3 ஆண்டுகளில் எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும்—சென்னையில் உள்ளவற்றிற்கு முதல் அடிப் படையில்—இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டு விட வேண் டும் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கந்தசாமி என்கிற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர்—அரசு சான்றிதழ் பெற்றவர்—அதிக பளு வைத்தாலும் சுலபமாக இழுக்கும் சக்தியை அளிக்க வகை செய்யும் முறையில் ஒரு புதிய பல் சக்கரம் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவரை—ஜி. டி. நாயுடு போல் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அரசு முன் வருமா ? அது மட்டுமல்லாமல், இந்த இயந்திரம் பொருத்தப் பட்ட பிறகு, மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்கும் பொருட்டு அத்தகைய வண்டிகளில் மீட்டர் பொருத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, யார் எதைத் தயாரித்தாலும் அது சரியான இயந்திரமாக இருந் தால், அதைச் சைக்கிள் ரிக்ஷாவில் வைப்பதைப் பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. சைக்கிள் ரிக்ஷா வைத்திருப்பவர்கள் அதை வைத்துக் கொள்ள இசைவு அளித்தால் நமக்கு எந்தவித மான கருத்து வேறுபாடும் அதில் இல்லை. இயந்திரம் பொருத் தப்பட்ட பிறகு மீட்டர் பொருத்தப்படுமா இல்லையா என்பதைப் பற்றி இப்போது சொல்ல முடியாது. ஆனால் தவறு நடக்காத அளவிற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும், பொது மக்கள் நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷா ஏழை எளிய நடுத்தர மக்களின்வாகனம், இதற்கு இயந்திரங்கள் பொருத்துவது வரவேற்கத்தக்கதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்கிறபோதுசென்னை யில் இன்னும் 3 ஆண்டுகளுக்குள் படிப்படியாக எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் இயந்திரம் பொருத்தப் பட்டு விடும் என்று

சொன்னார்கள். இதே முயற்சியை தமிழகத்தில் உள்ள பல் வேறு பெரிய நகரங்களிலும் விரிவுபடுத்த விரைவிலே நடவடிக்கை எடுத்தால், பயணம் செய்பவர்களுக்கும் எளிதாக விரைவாகச் செல்ல வசதியாக இருக்கும், ஓட்டுநர்களுக்கும் வசதியாக இருக்கும், ஆகவே, அரசு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துமா?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது கொண்டுவந்திருக்கும் திட்டமே சென்னை மாநகருக்கு மட்டுமல்ல, தமிழகம் பூராவும் பொருந்தும். ஆனால் கட்டாய மாக 3 ஆண்டுகளுக்குள் சென்னை மாநகரில் பொருத்தப்பட வேண்டும். அதன் பிறகு சைக்கிள் ரிக்ஷா அனுமதிக்கப்பட மாட்டாது. ஆகவே, படிப்படியாக மற்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதில் அரசுக்குக் கஷ்டமில்லை.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, 120 சி. சி. மோட்டார் பொருத்தப்படுவதினால் அதிகம் செலவாகும். அந்தச் செலவுக்காக அவர்களிடமிருந்து வரி ஏதாவது வசூல் செய்யப்படுமா? அப்படி வரி வசூல் செய்வதாக இருந்தால் எந்த அடிப்படையில் வரி விதிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 35 சி. சி. க்கு மேல் இருக்கிற அத்தனை வாகனங்களுக்கும் வரி வசூல் செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. 35 சி. சி. இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு வரி தேவையில்லை. ஆனால் இந்த சைக்கிள் ரிக்ஷாவைப் பொறுத்த வரையில் 120 சி. சி. இயந்திரம் பொருத்தப்பட்டாலும், அதை வைத்திருப்பவர்கள் ஏழை மக்கள் என்பதால், அவர்கள் வசதி பெறுவதற்காக அதற்கு வரி விலக்கு அளித்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, தற்போது ஓடுகின்ற சைக்கிள் ரிக்ஷாவை மனிதன் ஓட்டுகின்ற காரணத்தால் அதனுடைய அமைப்பு இருவர்மட்டும் அமர்ந்து செல்லும் வகையில் இருக்கிறது. இனிமேல் மோட்டார் மூலம் ஓட்டுவதால் அதிக ஆள் அதிலே உட்கார்ந்து செல்லும் வகையில் அதனுடைய அமைப்பை மாற்றியமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாவிலே கூட இரண்டுபேர்கள்தான் செல்ல அனுமதி அளித்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது சைக்கிள் ரிக்ஷா விலே 4 பேர், 5 பேர் போக முடியாது. ஓட்டுநர், மற்றும் இருவர் அமர்ந்து செல்வதுதான் சரியாக இருக்கும், அதற்குமேல் செல்வது சரியாக இருக்காது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — VAIMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS